**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8061891

1. District : Chennai PS: VE AC, CC-II Year: 2020 FIR No.: 03/2020 Date: 29.01.2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் at 09.30 hrs.

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Amended Act 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.01.2020 Date to : 22.01.2020
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை @ 12.30 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 29.01.2020 Time : 11.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written (Typed)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o. Ambattur Corporation, Chennai
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 Km North West.
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. Rajapandi (b) Father's/ ~~Husband's~~ Name : V. Ramachandran
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 5.1.2020 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Provisional store (g) Address : No. 47/21, 5th St, Bharath Pathra Rajeev Nagar, Pudur, Ambattur, Chennai 53
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Rambabu, Assistant, O/o. Ambattur Corporation, Zone 7, Town Planning Section.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K. Arunavel Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, CC-II ........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature]

[signature] 29/01/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.01.2020 @ 07.40hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Arunavel
Rank: நிலை .......... No. எண் ..........
Inspector of Police,
V&AC, CC-II
Chennai-16.

**..........Continuation to column no.12 of FIR in No.3/AC/CC-II/2020**

**பணிந்து சமர்ப்பிக்கபடுகிறது** : 27.01.2020ந் தேதி காலை 11.00 மணியளவில் நான் அலுவலக பணியில் இருந்தபோது சென்னை 53, அம்பத்தூர், புதூர், பாரத ரத்னா ராஜீவ் நகர், 5வது தெரு, அம்பத்தூரை சேர்ந்த திரு.ராஜபாண்டி, த/பெ.ராமசுந்தரம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று புகார்தாரரை பற்றியும் எதிரியை பற்றியும் தனி தனியாக ரகசிய விசாரணை மேற்கொண்ட பிறகு இன்று 29.01.2020ந் தேதி காலை 09.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை, நகரபிரிவு-2 ன் குற்ற எண்.3/AC/ 2020/CC-II u/s 7 of Pc Act 2018ன் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், நாள்:27.01.2019, R.ராஜபாண்டி, ஆ/வ.51, த/ பெ.ராமசுந்தரம், எண்.47/21, பெறுநர், உயர்திரு.காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சென்னை நகர பிரிவு-2, ஆலந்தூர், சென்னை–16. ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் 1992 முதல் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு மகளும், ஒரு மகனும் உள்ளனர். நான் அதிகம் படிக்கவில்லை. சொந்தமாக ஸ்ரீ முருகன் ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடையை நடத்தி வருகிறேன். 1998-ல் அம்பத்தூர், கள்ளிக்குப்பம், என்ற இடத்தில் பசும்பொன் நகர் விரிவாக்கம் என்ற லே-அவுட்-ல் 2918 சதுர அடி கொண்ட மனை எண்-1 -ஐ வாங்கியிருந்தேன். மேற்படி லே-அவுட்டானது அரசால் அங்கீகாரம் பெறாமல் இருந்ததால் கடந்த 2018-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேற்படி மனைக்கு அரசு அங்கீகாரம் பெற சென்னை மாநகராட்சி மண்டலம்-7ல் உள்ள அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அங்கு உதவியாளர் திரு.ராம்பாபு என்பவரை அணுகி விவரங்களை கேட்டறிந்தேன். நான் கொண்டு சென்றிருந்த நிலத்தின் வரைபடங்களை காண்பித்தேன். அதனை திரு.ராம்பாபு அவர்கள் பார்த்து விட்டு இதெல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அவர் சொன்ன வரைப்பட தயாரிப்பாளர் வி.பி.சிவக்குமார் என்பவரை சந்திக்கச்சொல்லி விசிட்டிங்கார்டு ஒன்றையும் என்னிடம் கொடுத்தார். எண்.1, சிவானந்தம் நகர், NPH ரோடு என்ற விலாசத்தில் அலுவலகம் நடத்தி வந்த திரு.வி.பி.சிவக்குமார் அவர்களை ஒரு வாரம் கழித்து சந்தித்தேன். அவர் என்னுடைய வரைப்படத்தை வாங்கி பார்த்துவிட்டு, அவரே தனி வரைபடம் தயார் செய்து தருவதாகவும், அதனை மண்டல அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படியும் சொன்னார். நான் அதற்கான செலவு பற்றி கேட்டதற்கு அதெல்லாம் மண்டல உதவியாளர் திரு.ராம்பாபு அவர்களிடமே பேசிக்கொள்ளுங்கள் என்றும், வரைபடத்தை நான் ராம்பாபுவிடம் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டார். பிறகு ராம்பாபுவை சந்தித்தபோது திரு.வி.பி.சிவக்குமார் தயாரிக்கும் வரைபடத்திற்கு தனியாக ரூபாய்.25,000/- கொடுக்க வேண்டும் என்றும், மாநகராட்சி செலவாக ரூபாய்.1,64,000/- Demand Draft கட்ட வேண்டும் என்று தெரிவித்தார். மாநகராட்சிக்கு இடத்தை வரன்முறைப்படுத்த கட்ட வேண்டிய தொகையை மாநகராட்சியிலிருந்து கடிதம் வந்தபோது கட்டினால் போதும் என்றும், நில

வரன்முறைபடுத்த மட்டும் உடனே தர வேண்டும் என்று தெரிவித்தார். அப்போது என்னிடம் பணம் இல்லாததால் மாநகராட்சியிலிருந்து கடிதம் வந்தபோது பார்த்துகொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். பின்னர் 2019 ஏப்ரல் மாதத்தில் சென்னை மாநகராட்சியிலிருந்து ரூபாய்.1,64,000/- கட்டச்சொல்லி கடிதம் வந்தது. நான் உடனே தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்க், அம்பத்தூர் கிளையில் ஆகஸ்ட் 2019-ல் Demand Draft எடுத்துக்கொண்டு வரைபடத்திற்கான செலவாக ரூபாய்.25,000/-ஐ ஏற்பாடு செய்து கொண்டு திரு.ராம்பாபு அவர்களை அதே வாரத்தில் நேரில் சந்தித்து கொடுத்துவிட்டேன். பின்னர் பல மாதங்களாகியும் இதுநாள் வரையில் எனக்கு மனையின் அரசு அங்கீகாரம் சம்மந்தமாக எந்த ஒரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. கடந்த 5 மாத காலமாக திரு.ராம்பாபு அவர்களை பல முறை சந்தித்தும் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. இதன் நடுவில் ராம்பாபு அவர்கள் நான் செலுத்திய ரூபாய்.1,64,000/- த்திற்க்கான Demand Draft காலாவதியாகிவிட்டது என்றும், வேறொரு Demand Draft எடுத்து தரும்படியும் கேட்டுக்கொண்டார். நானும் கடந்த 2019 டிசம்பர் மாதம் இரண்டாவது தடவையாக Demand Draft ஏற்பாடு செய்து கொடுத்தேன். பின்னர் கடந்த 22.01.2020 பகல் சுமார் 12.30 மணியளவில் சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 அலுவலகத்தில் திரு.ராம்பாபு அவர்களை சந்தித்து பேசும் போது இன்னும் மனைக்கான அரசு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று கேட்டதற்கு அவர் அதற்க்கெல்லாம் மேலும் செலவாகும் என்றும், அதற்கு தனியாக ரூபாய்.75,000/- லஞ்சம் கொடுத்தால் தான் ஏற்பாடாகும் என்று சொல்லிவிட்டார். அதற்கு நான் என்னால் அவ்வளவு முடியாது என்று சொன்னேன். அதற்கு திரு.ராம்பாபு முதலில் ரூ.20,000/- கொடுத்துவிட்டு, மீதியை அப்புருவல் வாங்கும்போது தந்துவிட வேண்டும் என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுத்து அரசு அங்கீகாரம் பெற விருப்பமில்லை. என்னுடைய மனைக்கு அரசு அங்கீகாரம் தராமல் திரு.ராம்பாபு ஒரு வருட காலம் தாமதப்படுத்தியது லஞ்சத்திற்காகத்தான் என்பது இப்போது எனக்கு புரிந்தது, எனவே ரூ.20,000/- லஞ்சமாக கேட்ட அம்பத்தூர், சென்னை மாநகராட்சி, மண்டலம் 7ல் உதவியாளராக பணிபுரியும் திரு.ராம்பாபு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு:-1.TMB வங்கி Demand Draft No."178556" 000060000: Amount Rs.1,64,000/- இப்படிக்கு (ஒப்பம்) (R. ராஜபாண்டி), 27.01.2020, Sir/Madam, On 27/01/2020 at 11.00hrs received the typed complaint and made confidential preliminary enquiry with the permission of DVAC and after verifying the veracity of the complaint and reputation of the accused, registered a case in V&AC, city –II Detachment, in Cr.No.3/AC/2019/CC-II u/s 7 of PC Act 2018 on 29.01.2020 at 09.30 hrs. The Original FIR along with complaint submitted to the court of Hon'ble Chief Judicial Magistrate, Thiruvallur and other copies submitted to the Officer's concerned. (Sd) (K.Arunasree) Inspector of Police, Vigilance and Anti-Corruption, Alandur, Chennai-16.

29/01/2020
Inspector of Police
V&AC, CC-II, Chennai 16